Registered as a News Paper மக்கங்கள் 06 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2024 தை 12 (25-01-1993) திங்கட்கிழமை ஓசை 842

## அறுவை சிகிச்சை அழிந்து போகும் நிலை

இலங்கையில் அறுவைச் சிகிச்சை வைத்தியம் அழிந்து போகும் நிலையை எட்டியுள்ளது என்று கொழும்பு வைத்திய நிபுணர்கள் அரசை எச்சரித்துள்ளனர். இதேவேளை, அரசு ரஷ்யாவிடமிருந்து டாக்டர்களைப் பெற ரஷ்ய தூதரகத்தின் உதவியை நாடியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. சென்ற வருடம் ரஷ்யாவிடம் இந்த உதவி கோரப்பட்டது என்றும், இதற்கான பதிலைத் தாம் எதிர்பார்ப்பதாக சுகாதார அமைச்சுப் பேச் [6 ஆம் பக்கம் பார்க்க]

# மேற்கு ஐரோப்பிய தலைநகரங்களில் இந்தியாவுக்கு எதிராக பேரணிகள்

## கிட்டுவின் மரணத்தை ஆட்சேபித்து வெளிநாட்டு தமிழர்கள் போர்க்கோலம்

(லண்டன்)

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டுவை நயவஞ்சகமாக மரணமடையச் செய்த இந்திய அரசுக்கு எதிராக ஐரோப்பியத் தலைநகரங்களில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடைபெற்றுவருகின்றன. பாரிஸ், பொன், லண்டன், உட்பட பல ஐரோப்பிய தலைநகரங்களில் இவ் எதிர்ப்பு ஊர்வலங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களின் போது கேணல் கிட்டுவின் முழு உருவப்படங்கள் எடுத்துச் செல்லப்படுவதாகவும் இந்திய எதிர்ப்பு சுலோகங்கள் எழுப்பப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் அவரது ஆற்றல்களைப் பாராட்டும் துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப் பட்டுவருகின்றன. இவ் ஊர்வலங்களில் ஆயிரக்கணக்கில் மக்கள் கலந்து கொண்டுள்ளனர்

இதேவேளை மேலும் பல ஐரோப்பிய நாடுகளில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும், இரு தினங்களுக்கு முன்னர் அவுஸ்திரேலியாவின் மெல்போன் நகரிலும் பேரணி ஒன்று நடைபெற்றது.

## இளாலியில் மோதல் படைபின்வாங்கியது

### பயணிகள் பத்திரமாகத் திரும்பினர்

[யாழ்ப்பாணம்]

இளாலி கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படை பீரங்கிப் படகு விடுதலைப் புலிகளால் விரட்டியடிக்கப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று இரவு 7 மணியளவில் இளாலி கடற்பரப்பி [6-ம் பக்கம் பார்க்க]

## தவறுதலாக துப்பாக்கி வெடித்ததில் கடற்படை சிப்பாய் பலி

### குருநாகலில் சம்பவம்

(கொழும்பு)

பஸ்ஸில் பயணம் செய்த கடற்படை சிப்பாய் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாகவெடித்ததால் அச் சிப்பாய் பலியானார். இச் சம்பவம் குருநாகலைக்கு அண்மையில் இடம் பெற்றது.

இவர் திருக்கோணமலையிலிருந்து கொழும்புக்குச் சென்று கொண்டிருந்தபோது (6-ம் பக்கம் பார்க்க)

## தளபதி கிட்டுவின் இழப்பு இருஇனங்களுக்கும் நட்டம்

### பி. பி. ஸி. சிங்கள சேவையில் விமர்சனம்

[லண்டன்]

"விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதியான கிட்டுவின் மரணம் இலங்கையில் வாழும் இரு இனங்களுக்கும் ஏற்பட்ட பாரிய இழப்பு என்றே சொல்லவேண்டும்" என பி.பி.சியின் சிங்கள ஒலிபரப்பு சேவையான "சந்தேசய" தனது ஆய்வுரைக் கண்ணோட்டத்தில் தெரிவித்தது

"சமாதானத் தீர்வுக்காக முயற்சிசெய்த முக்கியமான ஒருவரை இழந்தது துரதிஷ்டவசமானது" என இக்கண்ணோட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கண்ணோட்டத்தில் மேலும்; கிட்டு மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்த காலத்தில் சமாதான தீர்வொன்றுக்காக அவர் தீவிரமாக மனப்பூர்வமாகப் பாடு (6 ஆம் பக்கம் பார்க்க)

## விகாரையில்குண்டுவெடிப்பு பிக்கு உட்பட பலர் காயம்

[மாத்தளை]

மாத்தளை நாவுல போகஸ்முல்ல விகாரையில் வெடித்த குண்டொன்றினால் ஒரு பௌத்த பிக்கு உட்பட பலர் காயமடைந்தனர்.

மேற்படி விகாரையில் ஜே.ஆர். வகை கைக்குண்டு ஒன்றே வெடித்துள்ளது எனவும் இக்குண்டு விகாரைக்கு எப்படி வந்ததென்பது குறித்து மர்மமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இக்குண்டு வெடிப்பினால் விகாரையில் (6-ம் பக்கம் பார்க்க)

## போராட்டம் நடாத்த கூட்டுறவாளர் முடிவு

(யாழ்ப்பாணம்)

வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள இன்றைய காலகட்டத்தில் 1988 -ம் ஆண்டு தை மாதத்திற்குப் பின்னர் சேவையில் இணைந்த கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ரூபா 314/- கொடுப்பனவு நிறுத்தப்பட்டிருப்பது மனிதாபிமானம் அற்ற ஒரு நடவடிக்கை என்றும் அதனைக் கண்டித்து அனைத்து கூட்டுறவுப் பணியாளர்களும்போராட முன்வரவேண்டும் என்றும் மேற்படி விடயம் தொடர்பாக நேற்றுஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தின் அவசர ஒருங்கிணைந்த நிர்வாக [6-ம் பக்கம் பார்க்க]

## 9 மாகாணங்களுக்கும் தனித்தனி சமஷ்டி ஆட்சி

### அரசியல் யாப்பும் திருத்தப்படும்

(கொழும்பு)

ஒன்பது மாகாணங்களுக்கும் தனியான சமஷ்டி அமைப்பிலான ஆட்சி முறையினை சிபார்சு செய்வதென பாராளுமன்றத் தெரிவுக்குழு முடிவு செய்திருப்பதாக மிகவும் நம்பகரமாகத் தெரியவருகின்றது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இடம் பெற்றுவரும் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவே இறுதியாக இலங்கையிலுள்ள சகல மாகாணங்களுக்கும் தனித்தனி சமஷ்டி அமைப்பு முறையினை சிபார்சு செய்துள்ளதாக அறியமுடிகிறது.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் சிபாரிசுகள் அடங்கிய நகல் அறிக்கை இறுதி வடிவம் பெற்று இருப்பதாகவும். இது தேவையான திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் முழு அறிக்கையின் இறுதி வடிவம் விரைவில் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படலாம் என்று தெரிய வருகிறது.

இச் சமஷ்டி அமைப்புமுறையினை அமுல் செய்யும்பொருட்டு அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்தியமைக்குமாறு அரசாங்கத்திற்குப் பாராளுமன்றத் தெரிவுக்குழு சிபார்சு செய்யவுள்ளதாகவும் மேலும் நம்பகமாகத் தெரியவருகின்றது.

## ஹெலிகொப்டர் கொள்வனவு விமானப்படை அதிகாரிகள் கிழக்கு ஐரோப்பா பயணம்

[கொழும்பு]

மூன்று எம். ஐ - 8 ரக ஹெலிக்கொப்டர்களைக் கொள்வனவு செய்வதற்காக மூன்று விமானப்படை அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு சென்றுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ரஷ்சிய தயாரிப்பான இந்த வகை ஹெலிகொப்டர்களை கொள்வனவு செய்ய சிறிலங்கா அரசு கேள்விப் பத்திரங்களை கோரியிருந்தமை தெரிந்ததே.

இதேவேளை ஆர்ஜன்ரீனத் தயாரிப்பான இரண்டாவது புக்காரா விமானம் கடந்த சனியன்று கொழும்பு வந்து சேர்ந்தது.

எவ். ஏ. எம். ஏ. 58 ஏ ரக புக்காரா தரைத் தாக்குதல் விமானம் பாகங்களாகக் கழற்றப்பட்டு இராணுவத் தளபாடங்கள் ஏற்றும் அமெரிக்க விமானமான சார்லி 130 இல் கொழும்புக்குக் கொண்டுவரப் பட்டது. புக்காரா ரக முதல் விமானம் கடந்த டிசம்பர் இறுதி வாரத்தில் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டு பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## இளாலி-பூநகரி படகுச் சேவை

இளாலி-பூநகரி படகுச் சேவை இன்று திங்கட்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். வருவாய்ப் பொறுப்பாளர் யோ. தமிழ்க்குமரன் அறிவித்துள்ளார்.

## வரி விளம்பரம்

### டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு). தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும் DILKA WATCH & RADIO WORKS 284, ஸ்ரான்லி வீதி, (வடலிவில கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை: இலங்கை வங்கி அருகாமையில் சாவகச்சேரி (சி-5795)

### ஒலிவ் ஸ்நானப் பவுடர்

எண்ணெய் முழுக்குக்கு இதம் கூட்டுவது ஒலிவ் ஸ்நானப் பவுடர், சிகைக்காய், எலுமிச்சம்கோது, பயறு, வெந்தயம் மற்றும் இயற்கை சாதனம் கொண்டு தயாரித்த ஒலிவ் ஸ்நானப்பவுடர், அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. ''மிக்கிவைற்'' (சி-5868)

### வியாபாரிகட்கு

உள்நாட்டு, வெளிநாட்டு அழகுசாதன பொருட்களும், லேஸ் தையல் பொருள்கள், எவர்சில்வர், ஸ்கூல் ரவலிங் பான்பாக், இமிரேசன் கவரிங் நகைகள், விளையாட்டுப் பொருள்கள் மொத்தமாகப் பெற்றுக்கொள்ள ஜெயா அழகுசாதன மாளிகை 177A மின் நிலைய வீதி யாழ்ப்பாணம். (சி-5853)

### கலண்டர்கள் விற்பனைக்கு

அழகிய படத்துடனான மினி கலண்டர்கள் தொகையாக கொள்வனவு செய்பவர்களுக்கு ரூ 6/-க்கு விலாசம் பதிப்பித்துக் கொடுக்கப்படும். ஸ்ரீகாந்தா அச்சகம், புத்தக சாலை 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (4017)

### பிணைப்பத்திரம் புதுப்பிக்கலாம்

1993-ம் ஆண்டுக்கான நொத்தாரிஸ் பிணைப் பத்திரங்களை புதுப்பிக்கும்படி யாழ்ப்பாணம் பிராந்திய இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன முகாமையாளர் அறிவித்துள்ளார். இதற்கான ஒழுங்குகள் யாவும் 1993 02 01 ஆம் திகதியிலிருந்து யாழ்ப்பாணம் பிராந்திய இலங்கை காப்புறுதிக் கிளையில் செய்யப்படவுள்ளது.

### பரிசளிப்பு வைபவம்

(கொழும்புத்துறை)

சரசாலை இந்து இளைஞர் மன்றத்தால் சைவசமய பாடப் பரீட்சைக்கான பரிசளிப்பு வைபவம் இன்று திங்கட்கிழமை மாலை மூன்று மணிக்கு சரசாலை நுணுவில் அருள்மிகு ஸ்ரீ சிதம்பர விநாயகர் ஆலயத்தில் திரு. கு பரராசசேகரம் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவிற்கு பிரதம அதிதியாக தென்மராட்சிப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு பொ. வீரபத்திரன் கலந்து கொண்டு பரிசில்களை வழங்குவார். (24)

## திருடர் பிடிபட்டனர்

(சாவகச்சேரி)

பல திருட்டு சம்பவங்களில் தொடர்ந்து பல நாட்களாக ஈடுபட்டு வந்த ஐந்துபேர் கொண்ட குழுவொன்று சரசாலை காளிகோவில் பகுதியில் விழிப்புக்குழுவின் ஆதரவுடன் கடந்த வெள்ளியன்று விடுதலைப் புலிகளால் பிடிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பின்னர் அப்பகுதி காவல் துறையினரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.

## அறிவித்தல்

அண்மையில் கிளாலி கடனீரேரிப் பகுதியில் சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்களின் சார்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதற்கான இலவச சட்ட உதவி வழங்க இணங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கம் முன்வந்துள்ளது, எனவே சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து இதற்கான விபரங்கள் கோரப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

**இணைப்பாளர்**
சட்ட உதவிப் பிரிவு,
இ நீ ச. இயக்கம்,
இல. 6. அலோசாலை,
கொழும்பு -3. (சி-5874)

## ஈழநாதம் 3-ம் ஆண்டு நிறைவு

### போட்டிகளும் விதிமுறைகளும்

மக்கள் தினசரி 'ஈழநாதம்' தன் மூன்றாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக கருத்துப் படப் போட்டி (Cartoon), கவிதைப் போட்டி, சிறுகதைப் போட்டி என்பனவற்றை நடாத்த முன்வந்துள்ளது இப்போட்டிகளில் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் உள்ளடக்கங்கள் விரும்பி வரவேற்கப்படும்.

- கருத்துப் படங்கள் (Cartoon)
- சிறுகதை
- கவிதை

### போட்டியில் கலந்து கொள்ள கடைப்பிடிக்க வேண்டியவை

★ படைப்புகள் யாவும் சமகால நிகழ்வுகளைச் சித்திரிக்கும் வண்ணம் அமைதல் வேண்டும்.

★ கருத்துப் படங்கள் 15 செ.மீ X12 செ.மீ அளவுள்ள அட்டையில் கறுப்பு, வெள்ளை கோட்டுப் படங்களாக அமைதல் வேண்டும்.

★ படைப்புகள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
சிறுகதைகள் சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்,

★ கவிதைகள் 30 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

★ படைப்பாளரின் பெயர், முகவரி என்பன தனித்தாளில் எழுதப்பட வேண்டும் என்பதுடன் படைப்பாளர்கள் தமது சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

★ ஆக்கங்கள் இதற்கு முன் பிரசுரமானவைகளாகவோ, வேறெங்கும் பிரசுரம் பெறுவதற்காக கையளிக்கப்பட்டவைகளாகவோ இருத்தல் கூடாது.

★ போட்டிக்கான ஆக்கங்கள் அனைத்தும் பெப்ரவரி 5ஆம் திகதிக்கு பிந்தாமல் 'ஈழநாதம்' அலுவலகத்திற்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் போட்டிக்கான முடிவுத் திகதி நீடிக்கப்படமாட்டாது என்பதுடன், பிந்திக்கிடைப்பவை பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

★ போட்டி முடிவுகள் யாவும் 17-02-1993 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும்.
மூன்றாவது ஆண்டு நிறைவு விழா போட்டியில் முதலாவது பரிசுபெறும் ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும்.

ஒவ்வொரு துறையிலும் தகுதியானது எனத்தேர்ந்தெடுக்கப்பட்டவை ஈழநாதம் இதழ்களில் பிரசுரமாகும் முதல் மூன்று இடங்களையும் பெறும் ஆக்கங்களுக்கு மூன்றாவது ஆண்டு நிறைவு நாளில் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் 'ஈழநாதம்' ஆண்டு நிறைவுப் போட்டி என கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு.

**ஆசிரியர்**
'ஈழநாதம்'
31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 30 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் பேரவைத் தலைவர் திரு. வே. கெ தனபாலன் தலைமையில் நடைபெறும்.

## ஜெமினி

### சிகை அலங்கரிப்பு நிலையம்

### இடமாற்றம்

யாழ். நவீன சந்தை உட்புறம் இல. 41 இல் இருந்த எமது ஜெமினி ஸ்தாபனம், நவீன சந்தை உட்புறம் இல. 10 இல் (நேரெதிரில்) இன்று

**25 - 1 - 93 திங்கள்**
**காலை 9 மணி**

சுபநேரத்தில் மாற்றம் செய்யப்படுவதை வாடிக்கையாளர்கள், நண்பர்கள், மற்றும் ஆதரவாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

குறிப்பு : ஆண்கள் பெண்கள் கிறாப் பிடித்து முடி திருத்தும் வேலைகளும் மேற்கொள்ளப்படுமென்பதை மகிழ்வுடன் அறியத் தருகிறோம்.

உரிமையாளர்;
(சி-5875) வே. இராசதுரை

## நினைவு கூருகின்றோம்..

**1993-01-25**

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்ப்பாணம்-கைதடி, நாவற்குழிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய.

**விநோத்-ராஜன்** (யோகலிங்கம் செல்வக்குமார்-மானாவளை, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி-யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில், முகாமிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலற் கொல்லப்பட்ட 6 தமிழர்கள்-ரயில் நிலையத்தில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட-குழந்தைகள், பெண்கள் உட்பட - 11 தமிழர்கள்

1989 ஆம் ஆண்டு, தொழிற்கடமைக்குச் சென்று திரும்புகையில், கிளிநொச்சி இயக்கச்சிப் பகுதியில்வைத்து தேசவிரோதக் குழுவினரால் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட.

நாட்டுப்பற்றாளரான --

**குமாரசாமி தர்மலிங்கம்** (சுட்டுடை, மானிப்பாய்-யாழ்ப்பாணம்)

1991 ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் வீரச்சாவெய்திய

**கிருஷ்ணகுமார்** (பரமானந்தம் தயானந்தம்-கொழும்புத்துறை-யாழ்ப்பாணம்,

1992 ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

**கபிலன்-கபில்ராஜ்** பெரியதம்பி பாக்கியராசா-மகிழூர் நாகபுரம், களுவாஞ்சிக்குடி மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் எமது காவலரண் ஒன்றின் மீது தாக்குதல் மேற்கொண்ட சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய

**பட்டாபி-அறவிழிநாதன்** (காசிநாதன் சிவனேசரவி முறக்கொட்டாஞ்சேனை வந்தாறுமூலை-மட்டக்களப்பு)

மட்டக்களப்பு-இலுப்பையடிச்சேனைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

**குட்டிராஜ்** (ஞானசேகரம் உதயராஜ்-மயிலம்பாவெளி-மட்டக்களப்பு)

இதே பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய

**சிவநேசன்-சிவா** (குஞ்சுத்தம்பி சிவகுமார் 6-ம் வட்டாரம், துறை நீலாவணை - மட்டக்களப்பு)

**கலைவேந்தன்-ஜான்** (தம்பிப்போடி அரியன்-பன்குடாவெளி, இலுப்பையடிச்சேனை-மட்டக்களப்பு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/5866)

வாழ்க்கைத் திறன் கல்வி

# பயிற்சியில் பங்கு பெறாத ஆசிரியர்களால் சங்கட நிலை

(யாழ்ப்பாணம்

வாழ்க்கைத்திறன் கல்வியை 1993ஆம் ஆண்டு புதிதாக ஆரம்பிக்கவுள்ள பாடசாலைகளின் ஆசிரியர்கள், அதிபர்கள் சிலர் அவர்களுக்கென யாழ் கல்வித் திணைக்கள தொழில் நுட்ப பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கில் பங்குபற்றாமல் அலட்சியம் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் கனிஷ்ட, இடைநிலை வகுப்புகளில் இக்கற்கை நெறியை செயற்படுத்த முடியாத நிலை உருவாகியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெறாத ஆசிரியர்கள் இப்பாடநெறியை பாடசாலைகளில் அறிமுகம் செய்ய முடியாது என்ற சுற்று நிருபம் கூறுகிறது.

யாழ் மாவட்டத்தில் 1993 ஆம் ஆண்டில் இக்கற்கை நெறியை அறிமுகம் செய்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட 40 பாடசாலைகளிலிருந்து 12 பாடசாலைகளுக்குரிய அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் தான் இக் கருத்தரங்கில் பங்குபற்றினார்கள் எனத் தெரிய வருகிறது கோட்ட ரீதியாக வடமராட்சியிலிருந்து ஒருவரும் மருதனாமடக் கோட்டத்திலிருந்து ஒருவரும், பண்டத்தரிப்புக் கோட்டத்திலிருந்து 3 பேரும், வேலணையிலிருந்து ஒருவரும் சாவகச்சேரியிலிருந்து 3பேரும் மற்றும் யாழ் கோட்டத்திலிருந்து 3 பேரும் தான் கருத்தரங்கில் பங்குபற்றினார்கள் என அறிய வருகிறது.

மேலும் 1993இல மொத்தம் 218 பாடசாலைகள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படவுள்ளன. 1992ஆம் ஆண்டுக்கான வாழ்க்கைத் திறன் கல்வி மூலப்பொருள் நிதியைப் பெறுவதற்கு 178 பாடசாலைகளில் 27 பாடசாலைகள் இந் நிதியைப் பெற்றுப் பயன்படுத்துவதில் அக்கறை காட்டவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் சிலர் இதில் கரிசனை காட்டததால் இந்நிதியைக் கூட முழுமையாக வழங்க முடியாத நிலை உருவாகியுள்ளதாகக் கவலை தெரிவிக்கப் படுகிறது.

1992ஆம் ஆண்டிற்கான மூலப்பொருள் கொள்வனவுக்கு 2 42 800 ரூபாவும், கருவி உபகரணங்களுக்கு 1.35,500 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

வாழ்க்கைத்திறன் கற்கை நெறிப் பயிற்சியில் பங்கு பற்றாதவர்களுக்கு மீண்டும் ஒரு கருத்தரங்கை நடத்த தொழில் நுட்பப் பிரிவு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இரண்டாவது முறையும் இக்கருத்தரங்கை நடத்துவதால் ஏற்படக் கூடிய நிதி நெருக்கடியைச் சமாளிக்க வேண்டிய நிலையும் உருவாகியுள்ளது. வாழ்க்கைத்திறன் கல்வி 1994ஆம் ஆண்டு முடிவுக்குள் அனைத்துப் பாடசாலைகளிலும் அறிமுகப்படுத்தப் பட வேண்டும் என்று கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## துட்டகைமுனுக்கள் உருவாகி இனத்தைக் காப்பாற்ற வேண்டும்

– பி.எம்.பி. சிறில் பேச்சு

[கொழும்பு]

வடக்கு, கிழக்கு யுத்தத்தினால் பௌத்த சிங்கள மக்கள் கசுகொட்டை மற்றும் பலாக்கொட்டைகள் போல விழுந்து மடிகின்றார்கள். இந்த இறப்பில் இருந்து சிங்கள இனத்தைக் காப்பாற்ற ஒவ்வொரு சிங்களமகனும் துட்டகைமுனுவாக உருவாகவேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினரான பி.எம்.பி.சிறில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், நாட்டின் பிரிவினையை தடுக்க சுமார் ஏழாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் தமது உயிர்களை இழந்திருப்பதாகவும், றுகுண மாவட்டத்திலிருந்து பல துட்டகைமுனுக்கள் உருவாக வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

## ஜனாதிபதியுடன் தொலைபேசியில் துணைவேந்தர் பேசினார்

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழகத்தின் நெருக்கடி நிலைமைகள் குறித்தும், 1991 - 92 கல்வியாண்டில் ஏனைய செலவினத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதிநிலைமைகள் தொடர்பாக கொழும்பில் தங்கியிருக்கும் உபவேந்தர் பேராசிரியர் அ துரைராஜா தொலைபேசி மூலம் ஜனாதிபதி ஆர். பிரேமதாச வுடன் பேசியதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த கல்வியாண்டினை விட 1991 - 92 கல்வியாண்டில் கூடுதல் மாணவர்கள் சேர்க்கப்பட்ட போதும் அதே அளவிற்கேற்ப நிதி ஒதுக்காததினால் மாணவர்கள் கல்வி கற்பதற்கேற்ப பொருள், தளபாட வசதிகள் இன்மை குறித்தும் பேசியதாக தெரிவிக்கப் படுகிறது.

மேலும், யாழ். பல்கலைக்கழகத்தின் தொடர்ச்சியான பாவனைக்குத் தேவையான எரிபொருள்கள் அனுப்பி வைப்பது தொடர்பாகவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் பேச்சு நடத்தியதாக தெரியவருகிறது. [05]

## தாய்லாந்து பிக்குவிடம் திருடிய சிறிலங்கா பிக்கு

(கொழும்பு)

தனியார் போக்குவரத்து பஸ்சில் பயணித்த பிக்கு ஒருவரின் பணபபையைக் காணவில்லை என்று அதே பஸ்சில் பயணம் செய்த மற்றொரு பிக்கு கைது செய்யப்பட்டார்.

பஸ்சில் பயணித்த தாய்லாந்து நாட்டுப் பிக்கு ஒருவர் சற்று அசந்துவிட்டார். களுத்துறையில் போதிவிகாரைக்குக் காணிக்கை செலுத்த பணப்பையைத்தேடியபோது அதைக் காணவில்லையாம். பொலிஸாருக்குத் தகவல் அனுப்பியதும், அங்கு வந்த பொலிஸார் பயணிகளைச் சோதித்ததில் பணப்பை அகப்படவில்லை. சந்தேகத்தின்பேரில் அதே பஸ்சில் பயணம் செய்த மற்றொரு சிறிலங்கா பிக்குவைச் சோதித்த பொலிஸார் அவரிடம் காணாமற் போன 1500 ரூபா பணமும் பையும் பிடிபட்டது. இதனைத் தொடர்ந்து பொலிஸார் அவரைக்கைதுசெய்தனர்

கைது செய்யப்பட்ட பிக்கு வித்தியாலங்கார பல்கலைக்கழக மாணவன் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சந்திரசேகரன் வழக்கு கொழும்புக்கு மாற்றம்

(கண்டி)

கூட்டுப் படை தலைமைச் செயலகம் குண்டு வெடிப்புச் சம்பவத்துக்குத் திட்டமிட்டவர் என்று சந்தேகிக்கப்படும் வரதனுக்குப் பாதுகாப்பு இடம் வழங்கியதாக குற்றம் சாட்டப்பட்ட மலையக மக்கள் முன்னணித் தலைவர்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கொழும்பு உயர் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது

இந்த வழக்கில் மலையக மக்கள் முன்னணித் தலைவர் பி. சந்திரசேகரம் முதலாம் எதிரியாகவும், உப - தலைவர் வி. தர்மலிங்கம் இரண்டாம் எதிரியாகவும், செயலாளர் பி. அப்துல் காதர் மூன்றாம் எதிரியாகவும் காணப்பட்டுப் பயங்கரவாத நடவடிக்கைகள் தடைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டமா அதிபரின் பணிப்புரையின் பேரிலேயே இவ்வழக்கு கண்டி உயர் நீதி மன்றத்திலிருந்து கொழும்புக்கு மாற்றபபட்டுள்ளது.

ஜனாதிபதி - எதிர்க்கட்சி விவாதம்

## கட்சித் தலைவர் மட்டுமே பங்கேற்க வேண்டுமாம்

(கொழும்பு)

அரசின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான பொது விவாதம் நடத்தும் வழிமுறைகள் குறித்து ஆராய ஜனாதிபதி பிரேமதாசா எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தள்ளார்.

இது தொடர்பாக சுதந்திரக் கட்சியின் தலைவி சிறிமாவோ உட்பட பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்து கடிதம் எழுதியுள்ள ஜனாதிபதி பிரேமதாசா அதில் மேலும் குறிப்பிடுகையில், கட்சித் தலைவர்கள் மட்டுமே இக் கூட்டத்தில் பங்கேற்க வேண்டும் எனவும்குறிப்பிட்டுள்ளார்

## போக்குவரத்து சேவை

(வடமராட்சி)

கரணவாய் மத்தி கருணையம்பதி சனசமூக நிலையம் அப்பகுதி மக்களின் குறுகிய தூர போக்குவரத்துச் சேவைக்கு உதவும் வகையில் முச்சக்கர துவிச்சக்கர வண்டியை குறைந்த கட்டணத்தில் பயன்படுத்தி வருகின்றது.

இச்சனசமூக நிலையம் வறுமைபபட்டவர்களுக்கு இலவச சேவையைப் புரிந்துவருகிறது. இவ்வண்டியை நோயாளிகளே பயன்படுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது. (யோ)

ஆடைத் தொழிற்சாலை

## திறக்கப்படும் வேகத்தில் மூடப்பட்டும் வருகின்றன

(கண்டி)

மலை நாட்டிலுள்ள முக்கியமான ஆடைத்தொழிற்சாலை ஒன்று மூடப்பட்டதை அடுத்து 2 500 தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். தொழில் இழந்தவர்களில் அதிகமானவர்கள் பெண்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

டிக்கோயாவில் உள்ள ஆடைத் தொழிற்சாலையே ஜனவரி 19ஆம் திகதி மூடப்பட்டது. கடந்த செவ்வாயன்று தொழிலாளர் வேலைக்குச் சென்ற சமயம் தொழிற்சாலை மூடப்பட்டு விட்டதாகப் பாதுகாப்பு உத்தியோகத்தர் தெரிவித்தார்.

இது தொடர்பாக மத்திய மாகாணசபை உறுப்பினரும், இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கப் பொதுச் செயலாளருமான ஏ. இராமையா பிரதமரும் தொழில் அமைச்சருமான டி. பி. விஜயதுங்காவுக்குத் தெரிவித்துள்ளார்.

மத்திய மலைநாட்டில்மூடப்பட்ட ஆடைத்தொழிற்சாலைகளில் இது இரண்டாவதாகும். கண்டியில் பெயார் லயன் ஆடைத் தொழிற்சாலை 700 பேரை அண்மையில் வேலை நீக்கம் செய்துள்ளது.

## சிறிலங்கா - இந்தியா சமாதான பாதயாத்திரை

–அசாமி தேரோ திட்டம்

(கொழும்பு)

சிறிலங்கா - இந்தியா சமாதானப் பாதயாத்திரையொன்று அடுத்தமாதம் 26 ஆம் திகதியன்று சிவனொளி பாத மலையில் ஆரம்பிக்கப் படவுள்ளது நிப்பொன்சன் மயோகோஜி சமாதான நிலையத்தின் ஏற்பாட்டில் அசாமி தேரோ இப்பாத யாத்திரையை ஆரம்பிக்கவுள்ளார்.

கண்டி உட்படப் பல பிரதான நகரங்களுக்கு ஊடாகச் செல்லும் இப் பாத யாத்திரையினர் சென்னையில் தமது யாத்திரையை நிறைவு செய்யவுள்ளனர். இப் பாத யாத்திரையில் பல மதத் தலைவர்களும், முக்கிய பிரமுகர்களும், கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இராணுவத்திற்கு அன்பளிப்பு செய்த

## பஜீரோவை மீளப் பெற்றார் பிரதிசபாநாயகர் காமினி

[கொழும்பு]

இராணுவத்தினரின் தேவைக்கென அன்பளிப்பு செய்த பஜீரோ வாகனத்தை பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா மீளப்பெற்றிருப்பதாக கொழும்பு வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

32-8142 இலக்கமுடைய இந்தப் பஜீரோ வாகனம் தற்போது காமினி பொன்சேகாவின் மெய்ப்பாதுகாப்பாளரின் பாவனையில் இருப்பதாக இவ்வட்டாரங்கள் மேலும் கூறுகின்றன.

இராணுவத்தினரின் வேதனைகளையும், இடர்ப்பாடுகளையும் போக்கும் வகையில் பல்வேறு பொருள்களை பெரும் ஆர்ப்பாட்டத்துடன் சேகரித்து வழங்கி வரும் திரு. காமினி பொன்சேகா தமது வாகனத்தை மீளப் பெற்றிருப்பது குறித்து இராணுவத்தினரும் பெரும்பாலான மக்களும் ஏமாற்றம் அடைந்திருப்பதாக மேலும் கூறப்படுகின்றது.

## ஜனாதிபதி தேர்தலுக்கு முன் 300 வைத்தியசாலைகள்

[கொழும்பு]

ஜனாதிபதி தேர்தலுக்கு முன் சகல வசதிகளுடனும் கூடிய 300 மருத்துவ மனைகளை அமைக்கவுள்ளதாக ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்தார்.

பெலியத்தையில் ஜனாதிபதி ஆடைத் தொழிறசாலை ஒன்றைத் திறந்து வைத்த பின் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசும்போது இதனைத தெரிவித்தார்.

இப்போதுள்ள 202 ஆடைத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கையை 300ஆக உயர்த்தப் போவதாகவும், 25 கச்சேரிகளுக்குப் பதிலாக 300 பிரதேச செயலகங்கள் இந்த ஆண்டு இயங்க ஆரம்பிக்கும் என்றும் 300 மத்திய மகா வித்தியாலயங்களை அமைக்கப் போவதாகவும் கூறினார். இவற்றுடன் சேர்ந்தாற் போல் 300 பேக்கரிகளையும் அமைக்கப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

## காலிக் கடலிலிருந்து விக்கிரகம் மீட்பு

பெறுமதி மிக்க இந்துவிக்கிரகம் ஒன்றைக் காலிப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர். இந்தச் சிலை வெண்கலத்தினால் செய்யப்பட்டது எடை 25 கிலோகிராம்.

காலித்துறைமுகத்துக்கு அருகாமையில் போர்த்துக்கேயர் காலத்தில் கடலில் மூழ்கிய கப்பலின்அடியில் மதிபபுள்ள பொருள்களைத் தேடிய இரு சுழியோடிகளே இந்த விக்கிரகத்தைக் கண்டெடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. விக்கிரகத்தை சுழியோடிகள் விற்க்க முயற்சித்த போதேபொலிசார் விக்கிரகத்தைக் கைப்பற்றினர்.

நான்கு கைகளுடை இந்தச் சிலை இரண்டடி உயரமுள்ளதென்றும் வரலாற்றுப பின்னணி கொண்டதாக இருக்கலாம் என்றும் பொலிசார்தரப்பில் சொல்லப்படுகிறது.


## பாரிஸ் சென்ற இளைஞர் திருப்பி அனுப்பப்பட்டார்

(கொழும்பு)

பாரிஸ் விமான நிலையத்திலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட தமிழ் இளைஞர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்க திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த இரட்ணம் பாஸ்கரன் என்னும் இளைஞர் பின்னர் கொழும்பு நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது ஐயாயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் ஒரு லட்சம் ரூபா சரீரப்பிணையிலும் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டார்.

## 10-ம் நாள் வீர அஞ்சலி



தாயின் மடியில் 02-01-1960

தாயக விடிவில் 16-01-1993

வங்கக்கடலில் உயிர்நீத்த

### கேணல் கிட்டு

அவர்கட்கும்

ஏனைய ஒன்பது வேங்கைகளுக்கும் எமது

### வீரவணக்கம்

- ஊழியர்கள்

வீதி அபிவிருத்தித்திணைக்களம்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை.

(4140)

## 45-ம் நாள் நினைவலைகள்



தாயின் மடியில்

28. 08. 1973

மணலாறு மண்ணில்

12. 12. 1992

### வீரவேங்கை கலைவாணி

(செல்வராஜா மதிவதனி) (மதி)

திதி: 25-01-1993

மீசாலை மண் தனிலே பிறந்து
வன்னி மண் தனிலே வளர்ந்தாள்
வெஞ்சமர் புரிந்து வெல்லவே தாயகம்
வேங்கையென வந்தாள் கலைவாணி
அஞ்சிடா இளையவள் வெஞ்சினம் கொண்டு
எதிரியுடன் மோதினாள் மணலாறு தனிலே
விஞ்சிடும் போரிலே வீரப் புண்பட்டிவள் மடியும்போது
மலர்கவே தமிழீழம் என்றாள்
எஞ்சிய இவள் பணி தொடர்ந்து நாம்
ஈழத்தை மீட்பதே இவளுக்கு நமது அஞ்சலி

இந் நாளில் இவருடன் மணலாற்றில் மரணித்த மற்றும் ஐந்து போராளிகட்கும் எமது அஞ்சலியை செலுத்துகின்றோம்.

இந்த நினைவு நாளில் சகபோராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவர்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

சேணியடி வீதி,
மீசாலை மேற்கு,
மீசாலை.

(4130)

## பொருள்கள் இறக்குவதில் தாமதம்

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்தில் 'குமாரி' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் தாமதமடைந்து வருகின்றன.

கடல் நீர் வற்றி வருவதாலும், துறைமுகம் பழுதடைந்த நிலையில் இருப்பதாலும் இத்தாமதம் ஏற்பட்டுள்ளது.

கடல் நீர் வற்றி வருவதினால் இழுவைப்படகுகளில் கூடுதலான பொருள்களை ஏற்றிவரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை இத்துறைமுகத்தில் உள்ள பழுதடைந்த இழுவைப்படகுகளை ஒட்டி திருத்துவதற்குரிய பொருள்களை அரசாங்கம் அனுப்ப மறுத்து வருவதால் ஓரிரு இழுவைப் படகுகள் மூலமே பொருள்களை இறக்க முடிகிறது. (யோ)

## விசர்நாய்கடி

(வடமராட்சி)

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரை விசர்நாய் கடித்ததில் ஒருவர் அவசர சிகிச்சைக்காக மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மு. சோதிரவி (வயது 28) ரோகினி (வயது 19). சுபத்திரா (வயது 29) ஆகியோரே விசர்நாய்க் கடிக்கு இலக்கானவர். சுபத்திரா என்பவரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் பொலிகண்டி பாலாவியில் நடைபெற்றது. [யோ]

## இழுவைக் கயிறுகள் கொண்டுவரப்பட்டன

பருத்தித்துறைதுறைமுகத்திலுள்ள இழுவைப் படகுகளின் கயிறுகள் பழுதடைந்த நிலையினால் அங்கு பணிபுரியும் தொழிலாளர்கள் பெரிதும் சிரமப்பட்டு வந்தனர்.

யாழ் அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் எடுத்த பெருமுயற்சியினால் கடந்த 21ஆம் திகதி வந்த குமாரி கப்பலில் இதற்கான புதிய கயிறுகள் எடுத்து வரப்பட்டு, இழுவைப் படகுகளுக்கு பொருத்தப்பட்டுள்ளன.

## நிர்வாகிகள் தெரிவு

(வடமராட்சி)

கரவெட்டி தெற்கு திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் புதிய வருட நிர்வாகிகள் தெரிவு பின்வருமாறு;

தலைவர் சி. கந்தசாமி, உப தலைவர் க. தியாகராசா, செயலாளர் ஆ. வன்னியசிங்கம், உப செயலாளர் க. அதிசயராசா, பொருளாளர் சு. சின்னத்தம்பி [யோ]

## விலங்கியலில் அதி விசேட சித்தி

(யாழ்ப்பாணம்)

கண்டுக்குளியைச் சேர்ந்த தனிப்பட்ட பரீட்சார்த்தியாகிய தங்கராஜா நிமல்ராஜன் கடந்த வருடம் நடைபெற்ற க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பிரிவில் மூன்று "ஏ" ஒரு "பி" பெற்றுள்ளார். இவர் விலங்கியலில் "ஏ" பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது இவர் ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவராவார்.

## அம்மன் உற்சவம்

ஏழாலை தெற்கு களபாவோடை நாகபூஷணி அம்மன் ஆலய உற்சவம் ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் 27ந் திகதி வரை நடைபெறவுள்ள ஆலய உற்சவத்தில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்களும், பேராசிரியர்களும் தினமும் சொற்பொழிவாற்ற உள்ளனர்.

இன்று திங்கட்கிழமை சித்திரரத வெள்ளோட்ட விழாவும் 28ந் திகதி வியாழக்கிழமை தேரோட்டமும் நடைபெறும். (11) (09)

## வவுனியா வர்த்தகர் உளவாளிகளால் கைது

[வவுனியா]

வவுனியாவில் பலசரக்குக் கடை வர்த்தகர் ஒருவர் இராணுவ உளவாளிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்

வவுனியா சுந்தரபுரம் பகுதியைச் சேர்ந்த பெரியசாமி பெருமாள் (40) என்ற வர்த்தகர் கடந்த 21ஆம் திகதி வவுனியா நகரை நோக்கிச் சென்ற சமயம் உளவாளிகளினால் கைது செய்யப்பட்டார்.

### வேலணைத்துறையூர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க வருடாந்த

## பொதுக்கூட்டம்

மேற்படி பொதுக்கூட்டம் (28. 1. 93) வியாழன் காலை 10 00 மணிக்கு தீவகக்கோட்டச் செயலக பணிமனையில் தலைவர் திரு. கி. கார்த்திகேசு தலைமையில் நடைபெறும். சங்கஅங்கத்தவர்கட்கு தனிப்பட்ட அழைப்பிதழ் கொடுக்க முடியாமையால் இவ் அழைப்பை ஏற்று எல்லா அங்கத்தவர்களையும் சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
செயலாளர்

(சி-5856)

# BECON

## [பாரதிதாசன்]

ஸ்ரான்லி வீதி, - யாழ்ப்பாணம்.

A/L 92 AUS. பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான

## A/L DAY CLASSES

மீட்டல் வினா - விடை வகுப்புகள்

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | வரதராஜன் |
| கணக்கியல் | — | சௌந்தி |
| வர்த்தகம் | — | பசில் |
| இந்து நாகரிகம் | — | சைலஜா |
| தமிழ் | — | பிரபல ஆசிரியர் |
| அளவையியல் | — | பிரபல ஆசிரியர் |

**ஆரம்பம்: 26-01-1993**

(செவ். 8.00 A.M.)

பாடசாலை செல்லும் மாணவர்கள் இவ்வகுப்புக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

மீட்டல், வினா - விடை ஆகிய இரு பிரிவுகளுக்கான வகுப்புகள் நடைபெறும்.

(சி-5871)

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

92 பரீட்சையில் சித்தியெய்தாத மாணவர்களுக்கு

கலை, வர்த்தகம்

மீட்டல் பிரிவு III

## DAY CLASSES

**ஆரம்பம் 26-1-93 காலை 8 மணி**

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. கலாகரன் |
| வர்த்தகம் | — | திரு. இரகுநாதன் |
| கணக்கியல் | — | திரு. S. K. பிரபாகரன் |
| அளவையியல் | — | திரு. A. பிரபாகரன் |

மாலை நேர வகுப்பு

| | | |
|---|---|---|
| இந்துநாகரிகம் ] | | |
| இந்துசமயம் ] | — | திரு. காரை. சுந்தரம்பிள்ளை |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| புவியியல் | — | திரு. குணராசா |
| அரசியல் | — | திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு | — | திரு. சிறிதரன் |

செவ்வாய், வியாழன், சனி, ஞாயிறு ஆகிய நான்கு நாட்களும் நடைபெறும்.

கணக்கியல் வகுப்பு வாரத்தில் 8 மணித்தியாலம் நடைபெறும.

(சி-5859)

**சிந்தனைக்கு**

இன்பம் மிக்க கனவாயினும், எவரும் அதை வைத்து நீண்ட நாள் ஓங்கிச் செழிக்க முடியாது.

- சுவென்ட் ரி பேட்மோர்.


# ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 25-01-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் - 05


## சிங்கள கட்சிகளும் சமாதானமும்

முழுநாட்டையுமே பாதித்துவரும் இனப்பிரச்சினைக்கான தீர்வை அரசாங்கம் விரைந்து காண வேண்டும் என கடந்த வியாழக்கிழமை பாராளுமன்றத்தில்பேசிய சிறிலங்கா சுதந்திரக்கட்சிஉள்ளிட்ட சகல எதிர்க்கட்சியினரும் வற்புறுத்தியுள்ளனர். ''இனப்பிரச்சினைக்கு துரித தீர்வுகாண வேண்டும். அப்பாவிகளின் உயிர்கள் தொடர்ந்தும் பலியாகக் கூடாது'' இவ்வாறு சுதந்திரக் கட்சி எம்.பி யான கே. பி. ரட்னாயக்கா தெரிவித்தார்.

எதிர்க்கட்சியினரின் சமாதானம் ஏற்படவேண்டும் என்ற கோரிக்கை அனைவரும் விரும்புவது தான். தமிழ் மக்களும் அதையே விரும்புகின்றனர். ஆனால், எவ்வாறான சமாதானம், எவ்வாறு ஏற்படுத்துவதுஎன்பதே சர்ச்சைக்குரியதாக உள்ளது.

இதேவேளை, இனப்பிரச்சினைக்கு உடனடியாக தீர்வுகாணப்படவேண்டும். சமாதானம் ஏற்படுத்த வேண்டும் என எதிர்க்கட்சிகள் மட்டுமல்ல, அரசாங்கக் கட்சியினரும் இதே பல்லவியைத் தான் தொடர்ந்து பாடுகின்றனர். ஆனால், இவர்களில் எவரும் யதார்த்த பூர்வமாக பிரச்சினையைப் பார்ப்பவர்களாகவோ அன்றிச் சிந்திப்பவர்களாகவோ தெரியவில்லை.

தமது சுயநிர்ணய உரிமையும், தமது சுதந்திரத்தையும் வேண்டி நிற்கும் ஓர் இன மக்களின் பிரச்சினையை சிங்கள அரசியல்வாதிகள் எண்ணுவது போன்று அற்ப சலுகைகளை வழங்கி தீர்த்துவிட முடியாது. அம்மக்கள் கூட்டம் ஏற்றுக்கொள்ளக் கூடிய, அவர்களைத் திருப்திப் படுத்தக்கூடிய தீர்வுத்திட்டம் ஒன்று முன்வைக்கப்படுகையிலேயே இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும்.

ஆனால்,சிங்கள கட்சிகள் எவையும் அவற்றை ஏற்றுக் கொள்வதாக இல்லை. இனப்பிரச்சினைக்கு கொழும்பிலுள்ள தமிழ் குழுக்களே புறக்கணித்துள்ள தனித்தனி மாகாணங்களுக்கான சமஷ்டி அமைப்பு முறையையே சிங்கள அரசியல் கட்சிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்நிலையில் அதனை விட குறைந்தளவு தீர்வுத்திட்டம் ஒன்றின் மூலம், இனப்பிரச்சினையைத் தீர்த்துவிடலாம் என சிங்களக்கட்சிகள் கருதுவது அபத்தமான தொன்றாகும்,

அதாவது சமாதானம் ஏற்பட வேண்டும் சமாதானம் ஏற்பட வேண்டும் என பாராளுமன்றத்திலும், மேடைகளிலும் சிங்கள அரசியல்வாதிகள் பேசுகின்றனரே ஒழிய சமாதானம் நோக்கி ஓர் அடிதானும் எடுத்து வைக்க அவை தயாராக இல்லை. மாறாக பிரச்சினை காரணமாக தமிழர் தூக்கிய ஆயுதங்களைப் போட வேண்டும் என அரசாங்கக் கட்சியினர் கூறுகின்றனர். ஆயுதங்களைக் கீழே வைத்தால் மட்டும் போதாது ஆயுதங்களை ஒப்படைக்கவேண்டும் என சிங்களக்கட்சியினர் கோருகின்றனர்.

ஆனால் சிங்களக்கட்சிகளின் யதார்த்தபூர்வமற்ற இக்கோரிக்கைகள் ஒருபோதும் இனப்பிரச்சினைக்கு சமாதான தீர்வைக் கொண்டுவரப் போவதில்லை. இவர்கள் கடந்த கால அனுபவங்களையே கற்க மறுக்கின்றனர். அத்தோடு மனிதர்கள் அற்றபிரதேசங்களை இராணுவநடவடிக்கையின் மூலம் கைப்பற்றுவதாலும் அவற்றில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதாக அறிவிப்பதாலும், சமாதானமோ பிரச்சினைக்குத் தீர்வோ ஏற்படப் போவதில்லை.

மாறாக சிங்கள கட்சிகள் இனப்பிரச்சினையை தீர்க்க விரும்பின் தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்கும் நியாயமான அரசியல் தீர்வை அவை முன வைக்க வேண்டும். தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்கும் திட்டத்தைக் கைவிட வேண்டும். இதுவே சமாதானத்திற்கு இட்டுச் செல்லும், இதை விட்டு இராணுவ நடவடிக்கை மூலம் சமாதானத்தை ஏற்படுத்த சிங்கள கட்சிகள் விரும்பினால் சமாதானம் என்பது வாய்ப்பேச்சுடனேயே நின்றுபோய்விடும் என்பதில் சந்தேகப்பட ஏதுமில்லை.

# இரத்தம் சிந்துவதை நிறுத்தி சமாதானத் தீர்வு காண்க

### அங்கிலிக்கன் ஆயர் கோரிக்கை

(கொழும்பு)

இரத்தம் சிந்துவதை நிறுத்திப் பேச்சுவார்த்தைகளின் மூலம் சமாதானத்தையும், நீதியையும்நிலைநாட்டஇணைத்து வழிவகைகளையும் மேற்கொள்ளுமாறு அங்கிலிக்கன் ஆயர் அதி. வண கெனத்பெர்னாண்டோ அரசாங்கத்தைக் கோரியுள்ளார்.

இந்த முயற்சியில் அரசுக்கு உதவ கிறிஸ்தவ சமூகம் உள்ளிட வெளிநாடுகளிலும், உள்நாட்டிலும் நல்லெண்ணம் படைத்த பலர் தயாராக உள்ளார்கள் என்று கொழும்பு மறைமாவட்ட விசேட கூட்டத்தில் உரையாற்றும் போது ஆயர் தெரிவித்தார்.

இனப்பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொணர்ந்து நாட்டில் சமாதானத்தையும் நீதியையும் மீளவும்நிலைநாட்டச் சமயத் தலைவர்களும், நல்லெண்ணம் படைத்த அனைவரும் முன்வருமாறு அவர் அழைத்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், வடக்கில் புலிகளுடன் நான் நடத்திய பேச்சுவார்த்தைகளின் விபரங்களை அரசுக்கும், என்னைச் சந்தித்த வெளிநாட்டு ராஜதந்திகளுக்கும்தெரியப் படுத்தியுள்ளேன். இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வைக் காணமுடியாது என்பதை வடக்கு மற்றும் தெற்கில் உள்ள மக்கள் உணர வேண்டும். நீதிக்கும், நிலையான சமாதானத்துக்கும் பேச்சுவார்த்தைதான் ஒரேவழி.

நாட்டில் சமாதானமும் நீதியும் நிலவ நான் கடவுளைப் பிரார்த்திக்கின்றேன். யாழ்ப்பாண மக்களின் அவலங்கள் என்னைத் துன்பத்தில் ஆழ்த்துகின்றன என்றார்.

தங்கள் படிப்பைத் தொடர்வதற்கு அப்பியாசக் கொப்பிகள் தந்து உதவுமாறு ஒரு சிறுமி தன்னிடம் கேட்டதாகவும் ஆயர் கெனத் பெர்னாண்டோ கூறினார்.

## பரந்தன் ஆலையையும் தனியார் மயப்படுத்த முயற்சி

அரசுக்கு சொந்தமான பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை கொள்வனவு செய்வதற்கு சுதந்திரக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும், அமெரிக்க நிறுவனம் ஒன்றும் பாரிய முயற்சி மேற்கொண்டிருப்பதாக ''ராவய'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த நிறுவனத்தின் மூலம் முன்னர் அரசாங்கம் பாரிய இலாபம் ஈட்டி வந்தது குறிப்பிடத்தக்கதாகும். தற்போது பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை தனியார்வசம் ஒப்படைக்கப்படவிருப்பது குறித்து தொழிலாளர் மத்தியில் பாரிய அதிருப்தி தோன்றியுள்ளது.

## திருட்டுகள் அதிகரிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பகுதியில் கடந்த சில நாட்களாக சைக்கிள், மோட்டார் சைக்கிள்களின் திருட்டுகள் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழக மாணவர், பாடசாலை ஆசிரியர், மாணவர்களது சைக்கிள்கள் உட்பட பலரது சைக்கிள்கள் இவ்வாறு திருடப்பட்டுள்ளன.

## திருடியவர் கைது

(மல்லாகம்)

ஏழாலை வடக்கில், இடம் பெயர்ந்த மக்கள் இல்லாத வீடுகளில், பெருமதியானகதவு நிலைகளை உடைத்து திருடி, லாண்ட்மாஸ்டர் ஒன்றில் ஏற்றி வந்த திருடன் ஒருவர், சுன்னாகம் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுபோல மேலும் பல திருட்டுக்களும் இப்பகுதியில் நடைபெறுவதாக காவல் துறையினர் தெரிவித்துள்ளனர். இதற்கு தகுந்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் கூறினர். (9)(11)

# ஐ. நா. அமைதிப் படையினரின் ஆயுத கிடங்குகள் சூறை

### - முன்னாள் யூகோவில் சம்பவம்

(சரயோவா)

குரோஷியா முழுவதிலும் இருந்த ஐக்கிய நாடுகள் அமைதிப்படையின் ஆயுதக் கிடங்குகள் பலவற்றை செர்பியப் படைகள் சூறையாடியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் குரோஷியாவில் ஐ நா. அமைதிப்படையின் ரோந்துப் பாதையிலிருந்த நான்கு ஆயுதக் கிடங்குகளை உடைத்துக் கொண்டு செர்பியப் படைகள் புகுந்ததாக ஐ. நா. அமைதிப்படைத் தளபதி லெப். ஜெனரல் சதீஸ் நம்பியார் தெரிவித்துள்ளார்.

பொஸ்னியா - ஹர்சகோவியா பகுதியில் எண்பதுமைல் தொலைவிலும் ராடர் கடற்கரைப் பகுதியிலும் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## முன்னாள் அதிபர் புஷ்ஷிற்கு அதிர்ச்சி வைத்தியம் வேண்டும்

### - ஈராக் பத்திரிகை வர்ணனை

(பாக்தாத்)

குவைத்திலுள்ள ஓரிடத்தில் ஈராக் கொடியை புஷ்ஷிற்கு அணிவித்து, அவரைப் பூட்டி வைத்து அதிர்ச்சி வைத்தியம் மேற்கொள்ள வேண்டும் எனவும், தற்கொலை புஷ்ஷிற்கு சிறந்த நிவாரணி எனவும் ஈராக் அரசின் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

ஈராக்கின் சின்னம் [சதாம்] பிரகாசிக்கிறது. புஷ்ஷிற்கு வீழ்ச்சி என்றும், தலை போய் விட்டது. வால் ஆடுகிறது என்றும் அங்குள்ள பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ள அதேசமயம், புஷ்ஷிற்குப்பின் பதவியேற்று இருக்கும் புதிய ஜனாதிபதி பில் கிளின்டனைப் பற்றி இப்பத்திரிகைகள் எதுவும் தெரிவிக்கவில்லை.

## கூட்டணி நீடிப்பது பற்றி அ.தி.மு.க முடிவு செய்யட்டும்

### தமிழக காங்கிரஸ் செயலர்கள் அறிக்கை

(சென்னை)

ஊழல் பேர்வழி என்று முத்திரை குத்தி எம். ஜி. ஆர். ஆட்சியை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என போராட்டம் நடத்திய எஸ். டி. சோமசுந்தரம் தமிழ்நாட்டு நலன்கருதி தனது பதவியைத் தூக்கியெறிந்த வாழப்பாடி ராமமூர்த்தியை தலைவர் பொறுப்பில் இருந்து நீக்க வேண்டும் என்று கூறுவதில் ஆச்சரியம் இல்லை. இவ்வாறு அ. தி. மு. க. பொதுச்செயலாளரும் அமைச்சருமான சோமசுந்தரத்தைத் தாக்கி காங்கிரஸ் செயலாளர்கள் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்கள்.

அ. தி. மு. கவுக்கும்தி.மு.கவுக்கும் அந்தரங்கத் தொடர்பு இருப்பதாககாங்கிரஸ்தலைவர் வாழப்பாடியார் ஒருபோதும் சொல்லவில்லை. தமது தோழமையை முறியடிக்க காங்கிரஸ் தலைவர் குழிதோண்டுவதாக அமைச்சர் குற்றம் சாட்டுவது முற்றிலும் தவறு.

தமிழ்நாட்டு நலன்கருதி இந்தக் கூட்டணி நீடிக்க வேண்டும் என்பதற்காக வாழப்பாடியார் எத்தனை அவமானங்களை ஏற்றார்? இதயசுத்தியோடு பாடுபட்டவரை பதவி நீக்கம்செய்ய வேண்டும் என்று சொல்வது என்ன நியாயம்?

ஆட்டைக் கடித்து, மாட்டைக்கடித்து, மனிதனைக் கடித்த கதையாக காங்கிரஸ் தலைவரையே விமர்சனம் செய்வதை நாம் வேடிக்கை பார்க்க முடியாது வாழப்பாடியார் அவமானப்படுத்தியதாகச் சொல்கிறார் அமைச்சர். ஆனால்எம். ஜி,ஆரை அவரை விட யாரும் மோசமாக அவமானப்படுத்தியிருக்க முடியாது. ஊழல் பேர்வழி என எம். ஜி. ஆருக்கு முத்திரை குத்தி பின் அவரின் காலில் விழுந்து அமைச்சர் பதவியைப் பெற்றுக்கொண்ட இவர் பழங்கதைகளை மறந்து விட்டு வாழப்பாடியாரை அவதூறு செய்ய முற்படுவதை காங்கிரஸ் தொண்டர்கள் ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

## ஜோன் மேயர் இந்திய விஜயம்

(டில்லி)

இந்தியாவின் குடியரசு தினக் கொண்டாட்டங்களில் பிரதம விருந்தினராக கலந்து கொள்வதற்காக பிரிட்டனின் பிரதமர் ஜோன் மேயர் இந்தியாவிற்கு வருகை தந்துள்ளார். இவருடன் பிரிட்டனின் வர்த்தக தூதுக்குழுவும் வந்துள்ளது.

இந்தியா பிரித்தானிய வெள்ளை ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற பின்னர் குடியரசு தினக் கொண்டாட்டங்களில் பிரிட்டன் பிரதமர் ஒருவர் கலந்து கொள்வது இதுவே முதற் தடவை என்பது குறிப்பிடத்தக்கது இவர் இந்தியாவில் ஆறு தினங்கள் தங்கியிருப்பார்.

# அமெரிக்க விமானங்கள் மீது ஈராக் படைகள் சூடு

(வாஷிங்டன்)

ஈராக்கின் தென் பகுதியில் விமானம் பறப்பதற்குத்தடை விதிக்கப்பட்ட பகுதியில்தனது மூன்று விமானங்கள் சுடப்பட்டதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

அமெரிக்கக் கடற்படைக்குச் சொந்தமான விமானங்கள் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோதே சுடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கின் தென் பகுதியில் இருக்கும் ஷியா முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக் கருதி அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும், ஈராக்கிய விமானங்கள் பறப்பதற்குத் தடை விதித்திருந்தது தெரிந்ததே.

ஈராக் படையினர் பெரும் ஒலியை எழுப்பும் குண்டுகளையும், விமான எதிர்ப்புக் குண்டுகளையும் வெடிக்கச்செய்து அமெரிக்க விமானங்களை நோக்கிய திசையில் ராடார் நிலைகளை நகர்த்தியதாகவும் வாஷிங்டனில் பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகள் கூறியுள்ளனர். ஈராக்கிய நிலைகள் நோக்கி அமெரிக்க விமானங்கள் தாக்குதல் நடத்தியதாகவும் கூறப்படுகிறது. எனினும் இந்தச் சம்பவம் பற்றி ஈராக் இ, வரையில் எந்த அறிக்கையையும் வெளியிடவில்லை.

கொழும்பு, களனி

## பல்கலைக் கழக பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டன

(கொழும்பு)

இன்று நடைபெறவிருந்த கொழும்பு, களனி பல்கலைக் கழக பரீட்சைகள் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பல்கலைக் கழக மானியக் குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக் கழக ஆசிரியர்களின் போராட்டத்தைத் தொடர்ந்து இப்பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கலைநிகழ்ச்சிகள்

சாந்தன் இசைக்குழுவினரின் இசைநிகழ்ச்சிகள் விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழக யாழ். மாவட்ட பிரிவினரால் யாழ் சென்பற்றிக்ஸ் கல்லூரியில் எதிர்வரும் புதன் கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

உணர்வுடன் எழுவோம் என்ற நாடகமும் இடம்பெறவுள்ளது இக்கலை நிகழ்ச்சிகள் கடந்த 21ஆம் திகதி நடைபெற ஏற்பாடாகியிருந்தும், தவிர்க்க முடியாத காரணத்தால் அத்திகதியில்நிகழ்ச்சியை நடாத்த முடியவில்லை என இந்நிகழ்ச்சியின் ஒழுங்கமைப்பாளர்களான தீவக கலை பண்பாட்டுக் குழுவின் பொறுப்பாளர் திரு. குமணன் அவர்கள் தெரிவித்தார்.

## அரிசியுடன் "குமண"

2000 மெற்றிக் தொன் அரிசியுடன் "குமண" கப்பல் மிக விரைவில் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் எனத் தெரிகின்றது.

தற்பொழுது கொழும்பு துறைமுகத்தில் தரித்துநிற்கும் இக் கப்பலில், இரண்டாயிரம் மெற்றிக் தொன் அரிசியும் மற்றும் வேறு சில பொருள்களும் ஏற்றப்படுவதாகத் தெரியவருகின்றது

## புதியமாணவர் தெரிவுப் பரீட்சை

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் ஆண்டு 7 முதல் ஆண்டு 11 வரை வகுப்புகளுக்கு புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான பரீட்சை எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையில் நடைபெறும். (யோ)

### கிளாலி

லிருந்து சிலமைல் தூரத்தில் பயணிகள் படகுகளைத் தாக்கும் நோக்குடன் நடமாடிய சிறிலங்கா கடற்படைப் பீரங்கிப்படகை இடைமறித்த கடற்புலிகள் உக்கிர தாக்குதலை மேற்கொண்டனர். சில நிமிடங்கள் விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதல்களினால் நிலைகுலைந்த கடற்படையினர் முகாமுக்கு திரும்பிச் சென்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி உக்கிர தாக்குதலைத் தொடர்ந்து நேற்றைய போக்குவரத்து தடைப்பட்டது.

இதனால்ஆலங்கேணிப் பகுதி நோக்கிசென்ற பல படகுகள் திருபபின. இத்தாக்குதலின் போதுகடற்படையினருக்குஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவரவில்லை,

### அறுவை

சாளர் தெரிவித்தார்.

பாகிஸ்தானிலிருந்து பெறப்பட்ட டாக்டர்கள் கடந்த 21 ஆம் திகதிமுதல் மன்னார், திருக்கோணமலை, அநுராதபுரம், வவுனியா, அம்பாறை ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றவுள்ளனர். டாக்டர்கள் பற்றாக்குறை காரணமாக ஐரோப்பாவில் இருந்து வரவழைக்கப்பட்ட வைத்திய நிபுணர்கள் கடந்த இரண்டு வருடங்களாக அம்பாறை பொலநறுவ ஆஸ்பத்திரிகளில் இணைந்துள்ளனர். இவர்களைவிட மெட்சிஸ்சான் புறஸ்டியர்ஸ் (எம். எஸ். எவ்.) அமைப்பைச் சேர்ந்த நிபுணர்களும் நாட்டின் சில பாகங்களில் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

தவறான திட்டமிடல், கஷ்டப் பிரதேசங்களில் பணிசெய்வதற்கு ஏற்ப ஊக்குவிப்பு இல்லாமை, வெளிநாடுகளுக்குப் பயிற்சிக்குப் போகும் டாக்டர்கள் நாடு திரும்பாமல் இருப்பதே டாக்டர்களை 'இறக்குமதி' செய்வதற்கான முக்கிய காரணங்களாகும் என்று கொழும்பு வைத்திய நிபுணர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

### தளபதி

பண்டாரி என அவருக்கு நெருங்கியவர்கள் தெரிவித்தனர்.

ஆயினும் தமிழீழப்போராட்டத்தின் வெற்றிக்கு சர்வதேச அரங்கு மிகவும் முக்கியமானது என உணர்ந்து சர்வதேச ஆதரவு மூலம் தமிழீழம் அமைப்பதற்கு பாடுபட்டவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சமாதான பேச்சுவார்த்தைக்கு மத்தியஸ்தம் வகிக்க அவுஸ்திரேலியா, கனடா, சுவீடன், நோர்வே, பிரிட்டன் ஆகிய நாடுகள் முன்வந்தன. சமாதான பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுபவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க இந்தியா முன்வந்தது.

இரு தரப்பினரும் இன்றுவரை சமாதான தீர்வு எதனையும் முன்வைக்கவில்லை எனினும் சமாதானத்திற்கு முயன்ற முக்கியஸ்தர் ஒருவரின் இழப்பு இரு இனங்களுக்கும் ஏற்பட்ட பாரிய நட்டம் என தெரிவிக்கப்பட்டது.

### கடற்படை

இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் படுகாயம் அடைந்த இவர் குருநாகல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது கே. கே. பிரான்சிஸ் (வயது 22) என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

### விகாரையில்

ஏற்பட்ட குழப்பநிலையைப் பயன்படுத்தி விகாரையிலிருந்த நாற்பதினாயிரம் ரூபா பணம் களவாடப்பட்டுள்ளதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

### போராட்டம்

சபைக் கூட்டத்தில் அறைகூவல் விடுக்கப்பட்டது. கொடுப்பனவு நிறுத்தப்பட்டிருப்பதனால் பாதிக்கப்படுகின்ற பணியாளர்களுக்கு கொடுப்பனவைப் பெறுகின்ற ஏனைய பணியாளர்களும் ஆதரவாக போராட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது. இது விடயம் பற்றி வடக்கு கிழக்கு கூட்டுறவு ஆணையாளருக்கு அறிவித்து அவரிடம் இருந்து பாதகமான பதில் வரும் பட்சத்தில் மிகப் பெரிய தொழிற்சங்கப் போராட்டம் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. [22]

இடம்பெயர்ந்தோருக்கு

## தங்கியிருக்கும் இடங்களில் வாக்களிக்க வசதி

(கொழும்பு)

இடம்பெயர்ந்திருக்கும் வாக்காளர்கள் தாங்கள் குடியிருக்கும் இடத்திலேயே தமது பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளலாம் என்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

மாகாணசபைகள் தேர்தல் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டுவருவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இந்தத் தீர்மானத்தின்படி வாக்காளர் ஒருவர் தமது சொந்த மாவட்டத்திலிருந்து பாதுகாப்புகாரணங்களுக்காக இடம்பெயர்ந்திருந்தால், குடியிருக்கும் இடத்திலே வாக்கைச் செலுத்த முடியாதிருந்தால் தேர்தல் ஆணையாளரின் அனுமதியுடன் வாக்களிக்க வசதிசெய்யப்படவுள்ளது.

## கிழக்கு கிராமங்களில் 80 தமிழர் படையால் கைது

(களுவாஞ்சிக்குடி)

கிழக்கில் சில கிராமங்களைச் சுற்றிவளைத்த சிறிலங்கா விசேட அதிரடிப் படையினர் 80 தமிழரைக் கைது செய்து முகாம்களுக்கு கொண்டு சென்றுள்ளனர்.

எருவில் கிராமத்தை கடந்த வியாழக்கிழமை காலை சுற்றிவளைத்த விசேட அதிரடிப் படையினர் சுமார் 50 தமிழர்களை களுவாஞ்சிக்குடி முகாமுக்கு கொண்டு சென்றுள்ளனர்.

இதேவேளை களுவாஞ்சிக்குடிக்கு அருகிலுள்ள களுதாவளை கிராமம் கடந்த புதன் கிழமை சுற்றிவளைக்கப்பட்டபோது 30 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்டு முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்ட எவரும் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வவனியா மாவட்டத்தில்

## பயிர்ச்செய்கை இன்மையால் பெருமளவு நீர் வீணடிப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான நீர்ப்பாசனக் குளங்களில் உள்ள தண்ணீர் வீணடிக்கப்பட்டுள்ளது என்று கணக்கெடுப்பு ஒன்று தெரிவிக்கிறது.

இந்த மாவட்டத்தில் தமிழ் மக்கள் அடர்த்தியாக வாழும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் அனைத்திலும் உள்ள குளங்களின் கீழ் உள்ள வயல் காணிகள் பெருமளவில் பயிரிடப்படவில்லை.

இராணுவ ஆக்கிரமிப்பு. இராணுவ அச்சம் போன்ற காரணங்களினால் தான் இக் காணிகள் பயிரிடப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகள் தரிசு நிலங்களாக விடப்பட்டுள்ளன.

இது வன்னிப் பகுதி விவசாயிகளுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. (தி)

## ஆஸ்பத்திரி ஊழியர்மீது விமானப்படையினர் தாக்கு

### 18 பேர் பொலிஸாரால் கைது

(மாத்தளை)

சிகிரியா விமானப் படைத் தளத்தைச் சேர்ந்த விமானப் படையினர்தம்புள்ளை மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ ஆஸ்பத்திரி ஊழியரைத் தாக்கியுள்ளனர்.

நோயாளிகளைப் பார்வையிடும் நேரத்தில் குடிபோதையில் ஆஸ்பத்திரிக்குள் நுழைந்த விமானப்படையினர் பொதுமக்களையும், ஆஸ்பத்திரி ஊழியரையும் தாக்கியதாகப் பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இச்சம்பவம் தொடர்பாக 18 விமானப்படை வீரர்களைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

## துப்பாக்கிச் சூடு

(வடமராட்சி)

பருத்தித்துறை முனைக் கடற்பிராந்தியப் பகுதிகளில் சிறிலங்கா கடற்படையினர் இன்று காலை 6.30 மணியளவில் மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

பத்து நிமிடங்கள் தொடர்ச்சியாக மேற்கொண்ட வேளை கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவர்கள் சிலர் கடலில் குதித்து நீந்திக் கரையை வந்தடைந்தனர்.

மீனவர்களுக்கோ, மீன்பிடி வள்ளங்களுக்கோ சேதம் ஏற்பட்டதாக இதுவரை தகவல் இல்லை. (யோ)

## கலந்துரையாடல்

1993-ம் ஆண்டுக்கான கல்வித் திட்டத்தை நடைமுறைப் படுத்துவது தொடர்பாகவும், மாசி பங்குனி மாத கருத்தரங்குகளை நடாத்துவது தொடர்பாகவும் ஆராய்வதற்கான 'கல்வி உத்தியோகத்தர்' கலந்துரையாடல் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணிக்கு மணிக்கூட்டு வீதியில் உள்ள யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறும்.

## மரண அறிவித்தல்

### சுப்பையா அன்னபூரணம்

(புங்குடுதீவு - 6)

புங்குடுதீவு - 6 இறுப்பிட்டியில் பிறந்தவரும், ஓட்டுமடத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான சுப்பையா அன்னபூரணம் 24 - 01 - 93 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற அம்பலவாணர் சுப்பையாவின் அன்பு மனைவியும், நல்லையா, பர்வதம், செல்லத்துரை. தம்பிப்பிள்ளை, செல்லம்மா, கந்தசாமி, கமலாதேவி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், மங்கையர்க்கரசி, சங்கரப்பிள்ளை, யோகேஸ்வரி, பூபதி, சிவலிங்கம், கோகிலநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், வீரவேங்கை கதிரவன் (சசிகுமார்) மற்றும் பேரப்பிள்ளைகளின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (25 - 01 - 93) இன்று திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

687/6 செழியன் வீதி,
ஒ_டுமடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
[4148]

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 24- 01- 93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8150

வட பகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

24-5121, 27-5822, 26-1253, 26-8382, 42-2800, 26-3130, 41-5583, 42-7975, 41-8292, 24-5396, 24-2493, 26-5882, 26-5244, 42-728, 26-1791, 28-882,

வட பகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்;

22 0777, 26-3146, 26-5873, 26-1495, 26-2502, 26-2745, 42-3114, 28-6624, 28-2145, 24 4491, 22-6691, 26-1583, 43-1019, 26-7546, 24-6280, 24 9967, 26-5281, 28-9249, 26-6075, 24-4457

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.